## தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்

முன்னிலை – திரு.R.கனகராஜ், B.Com., L.L.B.,
தலைமை நீதித்துறை நடுவர், திண்டுக்கல்.

2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14–ம் நாள் வெள்ளிக்கிழமை

IA.No. 04/2024 in MACOP. No. 80/2017

1. திருமதி. க. ராமுத்தாய் ..... மனுதாரர்/மனுதாரர்

//எதிர்//

1. திரு. K. பழனிச்சாமி
2. கிளை மேலாளர், பாரதி ஆக்ஸா ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் ..... எதிர் மனுதாரர்கள்
3. பொது மேலாளர், ஐசிஜசிஜ லம்பார்டு ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் ..... 3–ம் எதிர் மனுதாரர் / சேர்க்க வேண்டியவர்

இந்த மனுவானது 14.02.2025–ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. C. கிரீஸ் கந்தராஜா அவர்களும், எதிர் மனுதாரர்கள் தரப்பில் திரு. K. பழனிச்சாமி அவர்களும் முன்னிலையாகினர். 1–ம் எதிர் மனுதாரரை பொறுத்த வரையில் அவர் இந்த வழக்கில் ஒருதலைபட்சமாக மாறி இருக்கிறார். இந்த மனுவில் இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, வழக்கு கோப்பை பரிசீலனை செய்து, இதுநாள் வரையில் இந்த நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்

### உத்தரவு

1. மனுவின் சுருக்கம் :–

மனுதாரர் / மனுதாரர் தரப்பில் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151 C.P.C.–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தன் மனுவில் இந்த வழக்கை பொறுத்த வரையில் அசல் மனுவில் கடந்த 07.10.2012 ம் தேதி 1–ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 57 AH 0015 என்ற பதிவு எண் கொண்ட பொலிரோ வாகனத்தில் சென்றபோது ஏற்பட்ட விபத்தின் காரணமாக உண்டான

காயங்களுக்கு இழப்பீடு கோரி தாக்கல் செய்யப்பட்டு உள்ளது. 1-வது எதிர் மனுதாரர் வாகனம், 2-வது எதிர்மனுதாரரிடம் காப்பீடு செய்யப்பட்டு உள்ளது. மேற்படி 2-வது எதிர்மனுதாரர் நிறுவனம், 3-வது எதிர்மனுதாரர் நிறுவனத்துடன் தற்போது இணைக்கப்பட்டு விட்டதாக 2-வது எதிர்மனுதாரர் தரப்பில் நீதிமன்றத்தில் குறிப்பிடப்பட்டது. எனவே அவரிடம், மனுதாரர் இழப்பீடு எதுவும் கோரவில்லை. எனவே, 3-வது எதிர்மனுதாரரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்து உத்தரவிட வேண்டும்.

2. எதிருரை சுருக்கம் :-

3-வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையில், மனுவில் குறிப்பிட்டு உள்ள 2-வது எதிர்மனுதாரர் நிறுவனம் தற்போது 3-வது எதிர்மனுதாரர் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு விட்டது என்பது ஒப்புக் கொள்ளப்படுகிறது. எனவே மேற்படி 2-வது எதிர்மனுதாரரால் வழங்கப்பட்ட காப்பீட்டு பாலிசியானது 3-வது எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டு விட்டது. எனவே 3-வது எதிர்மனுதாரரை பொறுத்த வரையிலான கேள்வி எழவில்லை. மேற்படி நிறுவனங்கள் இணைக்கப்பட்டு விட்டதால் காப்பீட்டு பாலிசியை பொறுத்த வரை அவை ஐசிஐசிஐ பாலிசி என எடுத்துக்கொள்ள வேண்டும். 3-வது எதிர்மனுதாரர் நிறுவனம் எவ்வித பாலிசியும் வழங்கவில்லை. எனவே, அசல் மனுவில் 2-வது எதிர்மனுதாரரை நீக்கிவிட்டு அதற்கு பதிலாக 2-வது எதிர்மனுதாரராக இந்த மனுவின் 3-வது எதிர்மனுதாரரை தரப்பினராக சேர்த்து உத்தரவிட வேண்டும்.

3. இந்த மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

மனு, எதிருரை பரிசீலணை செய்யப்பட்டது. வழக்கு கோப்பு பரிசீலணை செய்யப்பட்டது. இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது. மனுதாரரை பொறுத்த வரையில் 2-வது எதிர்மனுதாரர் நிறுவனத்தை 3-வது எதிர்மனுதாரர்

நிறுவனத்துடன் சேர்க்கப்பட்டு விட்டதால், அவரிடம் இருந்து மனுதாரர் இழப்பீடு எதுவும் கோர முடியாது என்பதால் 3–வது எதிர்மனுதாரரை தரப்பினராக சேர்க்க கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. 3–வது எதிர்மனுதாரரை பொறுத்த வரையில் மேற்கண்ட சங்கதிகளை அவர் ஒப்புக் கொண்டு இருக்கிறார். அதே சமயத்தில் 2–வது எதிர்மனுதாரர் நிறுவனம் 3–வது எதிர்மனுதாரர் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு விட்டதால், 2–வது எதிர்மனுதாரர் நிறுவனம் இவ்வழக்கிற்கு அவசியமற்ற நிறுவனம் என்பதால் அவரை அசல் மனுவில் நீக்கிவிட்டு இந்த மனுவின் 3–வது எதிர்மனுதாரரை அசல் மனுவில் 2–வது எதிர்மனுதாரராக சேர்க்க வேண்டும் என கோரப்பட்டு இருக்கிறது.

4. மேற்கண்ட சங்கதிகளை நன்கு கவனமுடன் பரிசீலணை செய்ததில், இந்த மனுவில் உள்ள 2–வது எதிர்மனுதாரர் நிறுவனம், 3–வது எதிர்மனுதாரர் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு விட்டதால் தற்போது 2–வது எதிர்மனுதாரர் நிறுவனம் என்ற ஒரு நிறுவனம் நடைமுறையில் இல்லை என்பது தெளிவாகிறது. அதே சமயத்தில் இந்த மனுவின் 2–வது எதிர்மனுதாரர் நிறுவனம் 3–வது எதிர்மனுதாரர் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு விட்டதால் 2–வது எதிர்மனுதாரர் நிறுவனம் வழங்கிய காப்பீட்டு பாலீசிகளின் பொறுப்புகளை நிறைவேற்றும் பொறுப்பு, இந்த மனுவின் 3–வது எதிர்மனுதாரருக்கு இயல்பாகவே மாறிவிடுகிறது. இருந்தபோதும் வழக்கை பொறுத்த வரையில் மேற்கண்ட சங்கதி வழக்கு தீர்ப்பிற்கு பிறகு, அசல் மனுவை பொறுத்த வரையில் 2–வது எதிர்மனுதாரர் நிறுவனம் அவசியமற்ற தரப்பினர் ஆகிறார் என்பதும் அவருக்கு பதிலாக 3–வது எதிர் மனுதாரர் நிறுவனம் சேர்க்கப்பட்டது என்பது இறுதி தீர்ப்பில் தெரிய வராது என்பதால் அசல் மனுவில் 2–வது எதிர்மனுதாரரை உள்ளபடியே விட்டுவிட்டு 3–வது எதிர்மனுதாரரை அசல் மனுவில் 3–வது எதிர்மனுதாரராக சேர்ப்பது தான் புதிதாக குழப்பங்கள் எதுவும் ஏற்படாடமல் இருக்கும் என இந்த தீர்ப்பாயம் கருதுகிறது. 2–வது எதிர்மனுதாரரை பொறுத்த

வரையில் செயல்படுத்தக் கூடிய உத்தரவுகள் அவர் மீது பிறப்பிக்க இயலாது என்பதால், அவர் செயலற்ற தரப்பினர் ஆகிறார். எனவே, இந்த மனுவின் 3–வது எதிர்மனுதாரர் நிறுவனத்தை அசல் மனுவில் 3–வது எதிர்மனுதாரராக சேர்த்து திருத்தம் செய்ய இந்த தீர்ப்பாயம் உத்தரவிடுகிறது.

5. இறுதியாக இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை எதுவும் இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2025–ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 12–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R KANAGARAJ
Digitally signed by R KANAGARAJ
Date: 2025.02.14 17:51:57 +0530

தலைமை நீதித்துறை நடுவர்.
திண்டுக்கல்.

இருதரப்பிலும் சாட்சியங்களோ, சான்று ஆவணங்களோ முன்னிலைப் படுத்தப்படவில்லை.

R KANAGARAJ
Digitally signed by R KANAGARAJ
Date: 2025.02.14 17:52:02 +0530

தலைமை நீதித்துறை நடுவர்.
திண்டுக்கல்.